உ

சிவமயம்.

# சிதம்பரநாதர் பதிகம்.



பி. நா. சிதம்பரமுதலியார்
பிரதர்ஸ் அவர்களது
சென்னை
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1923.

15

உ

கடவுள் துணை.

---

# சிதம்பரநாதர்பதிகம்.

---

## ஆசிரியவிருத்தம்.

விரித்தநெஞ்சடையாட வதனசந்திரனாட
விரிகமல நயனமாட
வெண்முருவ்நிலவாட நண்ணுதமருகமாட
வீசுமொரு செங்கையாடத்
தரித்தபுலியதளாட அபயகரமாட இரு
தங்குதோ டேசலாடத்
தாங்குநூலாடமே லோங்குநீராடவொளிர்
தண்பவள மேனியாட
உரித்தகரிபுரியாட உரககங்கணமாட
உபயபரி புரமுமாட
ஒருபதமெடுத்தாட ஒருபதமிதித்தாட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிறித்துமலைமங்கைகொண் டாடநின்றுடுமுன்
திதிநடனமென்று காண்பேன்
செகம்பணிதிகம்பர சிதம்பரநடேசனே
சிற்சொரூபா நந்தனே. 1

தங்குபூதாதிநாதாந்த மென்றெண்ணவரு
தநுகரண புவனபோகஞ்
சதுர்விதமடங்களுங் காலனீராகவுஞ்
சார்வாக முதலாகவே
மங்குபரசமய குருடர்க்கிருட்டாகவும்
வளர்சைவ சம்பிரதாயம்
வந்தசித் தாந்திகளெனுந்தெரியுறு விழியினோர்
மலவிரு ளனந்த கோடி
பங்கமுற் றேயோடி விடியவு மவரிதய
பங்கயம் விகசிக்கவும்
பரையாதி பஞ்சசத் திகளெனுங் கிரகணம்
பரப்பியே நடனமிடு மோர்
செங்கதி ரவன்நீ யுனைப்பரவி யென்விழி
தெரிந்து தரிசிப்பதெந்நாள்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபா நந்தனே. 2

அம்புவியி லண்டந் தொடுத்தகில புவனங்க
ளாவதே நின்னுருவமும்
அங்கங்குறுஞ் சராசரமென்ப தேஉருவி
னங்கமும் பொங்க பின்ன
சம்மந்த சிற்சத்தி யென்கிற விச்சையொடு
சபரூப ஞான கிரியை
தங்குமுட் கரணமு மங்காம லெக்குமே
தாவிடும் பசுவர்க்கமும்

நம்பும் புலன்களும் அவைக்கறி வளித்திடவும்
நண்ணும் ஐந்தொழிலேதிரு
நடமுமாம் ரின்று நாடகஞ் செய்திடில்
நாடுமிடம் வேறு காணேன்
செம்பொனம் பலமென்ப தென்பதென் னுளமாக
செய்துகொண் டேநடப்பாய்
செகம்பணி திகம்பரசிதம்பர நடேசனே
சிற்சொரூபாநந்தனே. 3

வருகணக்கில்லாத ஆத்மவர்க் கங்களுக்
கொருகைத் தவத்தம ருகம்
உடல்கரண புவனபோ கங்களை யுதிப்பிக்கும்
ஓரபய கரலதம்பின்
பெருகுத்துதிக்கு மொரு செங்கைத்தலத்தங்கி
பேர்பெறச் சங்க ரிக்கும்
பேதமற வூன்றுமொரு பாதபங் கயசுகம்
பேசத் திரோபவிக்கும்
அருளென்று தூக்கியா டியபாத மும்மலங்
களையுமற வேர்பி டிங்கி
அகண்டபரி பூரண சிதானந்த வாரியை
யளிக்குமுன் னருளற் புதத்
திருந்தின மகிமைதனை யாருள்ளபடி கண்டு
தெரிசித் திருக்க வல்லார்
செகம்பணி திகம்பரசிதம்பர நடேசனே
சிற்சொரூ பாநந்தனே. 4

பவங்களா கிப்பசியி னால்வாடியோடிப்
பரக்குமென் சிந்தை கண்டு
பரநாத பரவிந்து சிரமாக வருமென்று
பகரபர விந்து நாதல்
உவந்திடு சதாசிவ மகேசுர னுருத்திர
னுலவிமலை கடலி நடுவே
உரகசயனத்தினரி யைமடையுடைத் தொழுகு
மொருகமல மேலய னெனும்
கலந்தருட்கங்கலைகள் வன்னபுத மந்திர
புவனங்கள் பூதாதி விந்து
நாதமுடி வானதொரு போதபர மானந்த
நடுவெளியி லேநடித்துச்
சிவந்தவுன் சரணமலர்த்தேனையுண்டுண்டு
தேந்திட்டிருப்ப தெந்நாள்
செகம்பணி திகம்பரசிதம்பர நடேசனே
சிற்சொரூ பாநந்தனே. 5

ஆயிரங்கி ரணம்வீடு பானுபதி னாறுபத்
ததிகாரம் வந்திறந்தால்
அம்போ ருகத்திலுறை பிர்மனுக் கோர்பக
லங்கவர் கோடி யழியில்
மாயனுக் கோர்பக நூறுனா றுயிர
மாலிரந் தாலெமக் கோர்
மாத்திரைப் போதேனு மில்லையென வேயுள
மகிழ்ந்துசற் றேநகைத்தும்

தூயநகை யெறியாற் பிரபஞ்சமெல் லாத்தையும்
சுட்டுவெண் சாம்ப லாக்கிச்
சுட்டசாம்பலையெடுத்துத் துளித துச்சர்வ
சூனிய மானத்தி லோர்
சேயிழை யுடன்றளித் தானந்த நிர்த்தமிடு
தெய்வமிங் கென்னையாள்வாய்
செகப்பணி திகம்பர சிதம்பரநடேசனே
சிற்சொரூ பாநந்தனே. 6

உருவல்ல அருவல்ல உருவருவு மல்லவிங்
கொருவிதத் தறிவு மல்ல
ஒன்றல விரண்டுமல உள்ளல்ல வெளியல்ல
ஒன்றிலுந் தோய்வதல்ல
இருளல்ல ஒளியல்ல யிலதல்லஉளதல்ல
இன்பதுன்பங்க ளல்ல
இங்குநிர்ச் சித்தல்ல வெங்குநிர்ச் சத்தல்ல
வீறு முத னிடைய தல்ல
மருளின்றி பகலின்றி யிரவின்றி நின்றவர்கள்
மாசற்ற மனவெளி யெனும்
மாகனக சபைநடுவி லேயென்று மொழியா
மனோலயானந்தமய மாய்த்
தருளென்று நின்றநின் குஞ்சிதபதத்தையென்
சிந்தைமற வாது கண்டால்
செகப்பணி திகம்பர சிதம்பரநடேசனே
சிற்சொரூ பாநந்தனே. 7

சத்திபா தாளத்தி னப்புறத் தேயேக
 சரணபங் கயமுய லகன
சந்தொடிய வேயுதைத் தண்டகோ டிகளின்மேற்
 சடாடவி யெலாம் விரித்துக்
கைத்தலங் கஞநிறவி வைத்திடு புயங்களுங்
 கருணைவள ருங்குஞ் சிதக்
கஞ்சமல ரடியொன்று விஞ்செண்டி சாமுகங்
 களையுங் கடந்து நிற்க
மொய்த்தநூறுயிரங்கோடிசூ ரியர்சந்திரர்
 முதலொளி யெலாம முங்கி
மூழ்கவொருமேனியொளி காட்டிநின் றுடுமுன்
 முடிவினட னங்கொஞ்ச மோ
சித்தமா கியசடையினுள்ளே யடங்கிடுந்
 தெய்வீக மென்ன சொல்வேன்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
 சிற்சொரு பாநந்தனே. 8

கைத்தல மிரண்டிநுஞ் சங்குசக் கிராயுதங்
 காட்டியே ரக்ஷிப்பதும்
கண்டகண் டங்களை யெலாம்படைத் தருள்பெரிய
 கமலாசனத் துறைய தும்
மத்தகஜ கும்பமுலை வனிதையர்கள் நடமாட
 வண்டுகீ தப்பாடவே
மண்டுகற் பகனிழலி லண்டர்தொழ அரியணையில்
 வாழு மிந்திரபதமுமே

எத்தனை யடைந்தாலு மத்தனையும் வெகுதுய
மெனவெருத் தேவெனக் குன்
இணையிலாநந்தங்களைக் கண்டிருக்குமே
லிட்டபித்தின்னமின்னம்
செத்துப்பிரக்கினுமொருக்காலுமொழியாது
திருவுளமிரங்கியருள்வாய்
செகம்பணிதிகம்பரசிதம்பரநடேசனே
சிற்சொரூபாநந்தனே. 9

உம்முடையநடனத்தை உள்ளபடியொலியாம
லொருமிட மாகிலுங் கண்
டுத்தமர்கள் பெற்றிடுவர் முத்தியினை யென்றன்
றுரைக்குமுறை யுண்மை யானால்
முன்வந்த சனனத்தி லேயெனக் குக்கண்டு
முடியக் கிடைத்த ததனால்
முற்பந்த மோடிவிடு மிப்புந்தம்வாராது
முடியுமுன் னப்ப வந்தே
புன்மையறி வோடாகி லுங்காண வருகின்ற
போலினல் மேற்பிறப்பு
போனதே போவதற் கேதுவிதா தலாற்
புண்ணிய மிகுந்த விந்தச்
சென்மமன் றேசென்ம மெண்பத்து நான்குநூ
றாயிரஞ் சென்மத் திலுஞ்
செகப்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரு பாநந்தனே. 10

முற்றிற்று.